# கவிராட்சச கச்சியப்ப முனிவரின் திருத்தணிகையாற்றுப்படை

# tiruttaNikai ARRuppATai of kavirATcaka kacciyappa munivar
# In tamil script, unicode/utf-8 format

---


## Acknowledgements:

Our Sincere thanks go to Mr. Muthukumaraswamy of

Singapore for the preparation and proof-reading of this literary work.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2010.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
[http://www.projectmadurai.org/](http://www.projectmadurai.org/)

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

# கவிராட்சச கச்சியப்ப முனிவரின் திருத்தணிகையாற்றுப்படை

உ

கணபதி துணை

இந்தநூல் கவிராட்சச கச்சியப்ப முனிவரால் , தம்முடைய மாணாக்கரிற் சிறந்தவராகிய கந்தைபையருக்கு வயிற்றிலே ஓர் குன்மநோய் உண்டாயபோது இத்தணிகையாற்றுப்படையைப்

பாடி, அவர் நோயை மாற்றியருளினார் என்பது நூல் வரலாறு.

## விநாயகர் காப்பு

நேரிசை வெண்பா

சீரார் தொடைபுனைந்த செம்பாவை முன்புபோ
லேரார் தணிகை யிளவற்கு — நேராகக்
கூட்டுமால் வேற்றுருவங் கொள்ளாமை யெப்பொருளுங்
காட்டுமா லைங்கைக் களிறு.

## நூல்

பொன்மலைத் திருவிற் பன்னக
நெடுநாண்
மாயப் பகழித் தாயக் குரிசின்
முரணமை யிருகால்
திரள்மறைப் புரவி
அலர்மரை வாழ்க்கை வலவத்
தேரும்
வழங்குதற் கமையா
வண்மையின் இசைக்கும்
பெருந்தகு பாடல் திருந்திசைப்
புலவர்
அறன்கடைக் ககலாப்
பிறங்குதம் உளத்தில்
சாலாக் கல்வி மாலார்க் ககலா
வரன்மாண் டமைந்த
வுரன்மாண் பலகையிற்
தண்டா விருப்பின் எண்தோள்
முதல்வனோடு

ஆனாது பயிலிய அருமறைக்
கேள்வி
மாயிருந் தமிழ்க்கடல்
வடமொழிக் கடலென்று
ஆயிரு கடலும் ஆற்றலிற்
கடையா
ஐயம் திரிபெனும் அழல்விடம்
படாது
வெய்யசெம் பொருளெனும்
மிளிர்தீஞ் சுதைத்திரள்
ஆராக் காதலின் ஆராது
கைப்பவும்
மூன்றுவிரல் அழுந்தா
துடல்தசை திணிந்து
கான்றதேன் தெரியற்
கருங்குழன் மகளிர்க்கு
அணங்குளம் நிறீஇ ஆருயிர்
கவர்க்கும்

வளங்கவின் கொழிக்கும்
விளங்குசீர் இளமையும்
பல்வகைத் தொழிலும் பண்புற
நவின்று
சிந்தை வழிச்செலும் ஐந்துநிலை
பெறீஇயர்
அளவினைத் திறத்தின் அயரா
யாக்கையும்
அளகைக் கோமான் உளமழுக்
கறுப்ப
நிலந்தினக் கிடந்த நெடுநிதிச்
செல்வமு

நீடின் றிரியு நிலைமை நாடி
ஏற்போர் அங்கைக்
கொடைக்கடன் நிறுத்து
நோற்போர் நோற்கும்
நோன்மைசால் அறனெனும்

உறுதி யாக்கம் ஒய்யெனக்
கழலவும் 30
வரைத்திரள் புரள்விற்
றிரைத்தெழுந் திரைக்கணம்
விலங்கின வழங்கும்
விழுக்கலன் செறித்தும்
ஒளிறுவேல் அழுவத்
துருத்தெழுந்து அடர்த்துக்
குளிறுவார் முரசும் பிளிறுமால்
யானையும்
வைத்தபல் படையும்
வழாதுகைக் கொண்டு
பராபவத் தெவ்வர் வரிசையி
னிறுக்கும் 36
திறைகேழ் உரிமை முறைநேர்
நடாவியும்
தத்தந் தொழிலில் தலைநின்று
வளர்க்கும்

பொருளெனும் வெறுக்கை
போற்றாது நழுவவும்
மிஞிறுந் தேனும் வெறிகவர்
தும்பியும்
கஞலிப் பட்குரல் கஞற்றுவ
சுழலும்
இருள்துஞ்சு மலர்ப்பொழின்
மருள்சில் லோதிப்
பூவார் சோலைப் புறத்தகப்
படுத்து
மேவரத் தடையிய விதுக்குறை
கடுக்கும்
திவளொளி மாண்ட குவவுநுதல்
வாணுதல்
தீங்கதிர் அமிழ்தத் திங்கட்
பிளவின்
நீங்குகார்க் கறையு நிலாத்தவழ்
வெண்மையும்

விராயுருக் கொண்டென
மிளிர்மதர் மழைக்கட்
செங்குமு தத்துச் சிறுமதி
கிடந்தெனச்
செவ்வாய் அகத்த செயிர்தீர்
வெண்பல்
விலங்குபாய் கதிர்க்குழை
வீழ்ந்துசெகில் துயல்வர
வள்ளையின் ஒழுக்கிய
வள்ளெழிற் செஞ்செவி
செவ்வாய் கவுள்துணைச்
சேல்விழி நெற்றி
இவ்வா யுறுப்பான் இன்சுவை
யமிழ்த
வுறுகொடை யாற்றி
வறிதுகொடை காட்டும்
வளைநிதி தன்னைக் குடுமிகைக்
கொண்டவ்

வளைமேல் கொண்டு
வயங்கொளி தோற்றும்
பதும மாநிதி யிதுவெனக்
கவன்று
தாவா வுறுவர் மேவா வுள்ளமும்
ஓவப் படமென வுஞற்றுறு
திருமுகப்
பகுவாய்ப் பொற்குழை மகரமீ
னாஅன்று

ஐதுமீக் கிடத்தலின் ஐங்கணைக்
கிழவோன்
வெய்துதன் னாணை விளக்கிய
வுயர்த்த
அணங்குதவழ் கொடியின்
இணங்குபணை வேய்த்தோள்
காம்புபுடை யடுத்த கதிர்மணிக்
குன்றின்
தோள்புடை யடுத்த சுடர்ப்பூட்

கொங்கை
குவிமுலைத் துணைக்கொள்
சவிமணி மார்பில்
தத்தமது ஏணி கடவாது தணிய
நள்ளுநின் றுணர்த்துந் தள்ளாக்
குறியின்
அணிவயிற்று ஒழுகிய
மணிமயிர் வல்லி
நெடுகுமயிர் ஒழுக்கு
நெடுவழிப் படர்ந்து
கடுமுலைக் கோட்டுக் களிறுபட
எடுத்த
படுகுழி அனைய பயம்படு
கொப்பூழ்
நடுநின்று வாழ்வோர்
நலத்தொடு முரண
நடுநின்று தேய்ந்த விடுகுகொடி
மருங்குல்

வையகம் உயிர்த்தோன்
மதிபுனைந்து இயற்றலின்
கைபுனைந்து இயற்றுங்
கதிர்மணித் திண்தேர்
கடாதுருக் கொண்டோடுந்
தடாதபே ரல்குற்
கீழ்மே லாகக் கிளர்ந்தெழின்
அத்தகு
வாழையொடு பொரூஉம்
வார்ந்தசெறி குறங்கின்
வேற்றொரு தாமரை மேவந்து
தொழில்செய
வீற்றுஇருந் தருளும் விரைமல
ரேய்க்கும்
அலத்தக மலர்ந்த நலத்தகு சீரடி
மயிலியன் மருளும் இயன்மட
மாதரைச்
சீலம் விழைவே செயல்குறி

இவற்றான்
நால்வகைப் பேதமும் மாலறத்
தெரிந்து
மருந்துமந் திரத்தும்
திருந்துவிழை வேற்றித்
தேயம் பயிற்சி சேட்டை
இயல்பே
இன்பத் துறையே இருவகைத்
தொழிலே
இங்கித வகையே இவைநனி
நாடி
இருவகைப் பொழுதொடும்
ஏற்ப மருவிய
மூன்று காலமு மூன்று வேகமும்
ஒப்பக் கலவி உஞற்றுபே ரின்ப
அவாவுளம் பொதிந்துகொண்டு
அழற்றுவெம் படர்நோய்
தவாதுபிறை போலத்

தணிவின்றி வளர
உவாமதி போல உருவே தபவும்
கடவுட் பொங்கரும் தடமருப்
பாவும்
சிந்தா மணியு நந்தா நிதிகளும்
கலன்முத லான வளம்பல
கொழிப்ப
பல்வகைக் கணமும்
பணிந்தெழுந் தேத்த
தெவ்வுத் தானவர் அவ்வித்து
ஏங்க
விரிகதிர்ப் பிழம்பும் அரிமான்
தவிசிற்
களிகூர் நெஞ்சாற் காவல்
வைகும்
ஒளிகூர் மகவான் உறுபதம் ஆதி
எளிதினுய்த்து அளிக்கும்
தெளிவினை போலாது

பார்முதிர் புணரிப் பாயற்
கடவுள்
வார்மதுப் பொகுட்டு
மரைமலர்ப் புத்தேள்
என்றிவர் தமக்கும் எய்தற்கு
அரிய
சரியை கிரியை யோகத்
தவநிலைப்
பெயர்பொச் சாப்பப்
பிறக்கணித்து உகவும்
ஊன நாடகம் உஞற்றிய
திருவருள்
ஞான நாடகம் நவிலிய மாறலும்
ஆனா மலப்பகை நோனாது
கழலத்
தானா னந்தத் தனியுயிர்
மடங்கக்
கண்காண் குருமுதற் கடவு ளாகி

உயிரே யவத்தை யுணர்த்துந்
தன்மை
அருளின் இயல்பே அங்கதன்
பயனே
பெரும்பெயர்த் திறமே
பெற்றவர் முறையென்று
அனைவகை யேழும் அரில்தபத்
தெரிப்பத்
தாழாது கெட்டு வீழாது சிந்தித்து
அங்கைக் கொண்ட
அமிழ்தெனத் தெளிந்து
பொங்குபே ரின்பம் புணராது
புணரும்
நிட்டை கூட நிலையது நீங்கவும்
பல்திறப் பகைஞர் படையொடு
நேர்ந்தென
வெல்திறங் காட்டாது
வீற்றுவீற்று உடற்றும்

பிணிக்கோட் பட்டுப் பேதுறு
மனத்தான்
முந்தையோர் ஈட்டும் முழுநிதிச்
செல்வமும்
பொய்ம்மை யாளர் புகழெனத்
தேய
நோய்ப்பகை யாளர்க்கு
நொடிந்தென் சிதரிற்
பல்வகை மருந்துக்குப்
பகர்விலை தொலைச்சி
அதுவென வெறுவியது
அன்றுமற்று இதுவென

முன்னைநாள் மருந்தை
முறைமுறை இகழாப்
பின்னைநாள் மருந்தைப்
பெட்டுவாய் மடுத்துப்
பண்டைநோய் மேலும்
பருகுபல் மருந்தால்

மண்டுநோய் வேறு
மரீஇக்கிளர்ந்து உருப்ப
உரைத்தஎன் மொழிவழி
யொழுகினை அல்லைகொல்
பெருத்துநோய் தெறும்என
மருத்துவன் ஒழியத்
தெய்வத் திறத்தால் தீர்வுகாண்
பாம்என
உள்ளூர் வயின்வயின்
தெள்ளிதின் ஓங்கும்
புரிமுறுக்கு அவிழ்க்கும்
பூம்புனல் தீர்த்தமும்
பல்வகைத் தெய்வப் பசும்பொற்
கோட்டமும்
படிந்தும் பணிந்தும் பயன்கா
ணாமை
அணிஅயல் புறநகர் மணிகெழு
கோட்டமும்

விரத நியதிப் பரவு கடனாதிப்
பல்வேறு தொழிலொடு
படர்ந்துபணிந்து ஏத்தியும்
கவலை நெஞ்சம் கையறு
பிணையச்
சேண்சென்று ஓராஅல்
செய்தென வலித்து
மிக்கநோய்க்கு இரங்கும்
ஒக்கல்புறம் தழுவ
வறுமைக் கவற்சியும் இறுகுறப்
பிணிப்ப
இல்லும் தமரும் இசைபயில்
நாடும்
மென்மெலக் கழீஇ விரிகதிர்ப்
படையால்

இருள்கால் சீக்கும் எழுபரித்
தேரோன்

கடுஞ்சினம் திருகிய
கொடுமைகூர் அமயத்து
முளிமுதல் முருக்கிய
முழங்கழல் போழ்ந்து
வளியுலாய்ப் புறத்தும்
வழங்குநர்த் தெறூஉம்
பைதரு கானத்துப் படர்நெறி
ஒதுங்கலின்
முந்துபரல் உழந்த வெந்துயர்க்
கொப்புள்
பிந்துபரல் உழத்தொறூஉம்
பிளந்துநீர் உகுப்ப
இயங்காச் செல்லல் இணைஅடி
தாங்க
வெயிற்பகை உழந்த வேர்ப்புற
நனைப்பச்
சூறை மாருதம் துறைத்துறை
எடுத்த

பூழி போர்த்த பொற்பறு மாசு
கலுழ்நீர் அல்லது கயந்தலை
இன்மையிற்
கழுவுதல் புரியா முடைபயில்
காயமோடு
இலையின் மராத்த நிலையின்
மென்னிழல்
சேய்வரல் வருத்தம் சிதைபாக்கு
அசைந்து

நெட்டுயிர்ப்பு எறிந்து
நினைதரும் இரவல
ஆற்றா நின்னுளத்து
அவலம்இனி ஒழிக
புளிஞரும் அருளும் போக்கரும்
சுரத்து
வீற்றுவீற்று ஒழுகும் ஆற்றினில்
திரியாது
ஒருநெறி எதிர்ப்பாடு உற்றது

முன்னைப்
பழுதறு பெருந்தவப் பயனது
போலும்
விழும வெந்துயர் முழுதொரால்
வேண்டின்
பாணியாது இன்னே காணிய
எழுமதி
தோல்தேர்க் கோடும்
திருகுகோட்டு இரலையின்
நோய்ப்பகை என்ன
வாய்ப்பிலாது அமையும்
அடுத்தடுத்து யானும் அலமரும்
காலை
ஊரூர் வைகிய சீர்கெழு
மாந்தருள்
உண்டி கலவி உறுதொழில்
முதலா
மண்டிய பகுப்பின் வரையறைப்

படாது
வேறுவே றுயிர்க்கும் வெம்பிணி
யாளரும்
கருவி போழ்ந்த பெரும்புண்
உறுநரும்
குட்டம் பெருநோய் முட்டிய
வாதம்
முயலகன் ஆதி மொய்ப்பிணி
உழவரும்
பாப்புக் கோள்ஆதிப் பலவகைக்
கடிஞரும்
பேய்கோட் படுநரும் பித்துமீக்
கூர்நரும்
உறுப்புக் குறைநரும் ஒண்குணம்
இழநரும்
இன்ன பல்றிறத்து எனைவரும்
அன்றிக்
கல்விவேட் டவருங் கான்முளை

வீழ்நரும்
செல்வம் வீழ்நரும் தேயம்நா
டுநரும்
அலர்முலை மடவார் கலவிகா
முறுநரும்
இரண்டறு கலப்பின் இன்பநச்
சுநரும்
இனையபல் வேறு நினைவினர்
எவரும்
வாட்டுவ தணப்பவும் வேட்டன
மணப்பவும்
மேற்கொண் டெழுந்து மேனாள்
நேர்ந்த
பொற்கிழித் திரளும் பூந்துகில்
மூடையும்
மணிப்பூண் பேழையும் வார்தரு
கவரியும்
பைம்பொற் கவிகையும்

செம்பொற் சிவிகையும்
ஊர்தியுங் கொடியும் வார்விசி
முரசும்
சூட்டுவா ரணமுந் தோகைய
மயிலும்
தத்தமக் கியன்ற தழீஇயினர்
போதும்
ஓசைதிக்கு அதிர்க்கும் மாசனப்
பெருக்கம்
காண்டொறும் ஈண்டிய
களியேன்
உடங்குசென்று இருப்பான்
ஒருப்பட்டு எழலும்
துன்னிய விழுமநோய் தன்ன
நீங்க
உறுதுயர் யாக்கை சிறிதுவலி
யெய்த
ஒய்யெனக் கிளர்ந்த

உவகைநெஞ் சத்துப்
படர்பேர் ஊக்கம் பிடர்பிடித்து
உந்த
எழுந்தனன் இம்மென ஏகுதல்
தொடங்கி
அடிபெயர்த் தோறும்
அஞர்ப்பிணி நழுவ
உவரி நீரில் தவளஎழு மகிழ்வால்
அவல்மிசை பாடாஅ அனைத்து
நெறியாகச்
சென்றனன் அடுத்து மன்றல்நகர்
நுழைதலும்
வெருவுநோய் இருகூற்று
ஒருகூறு விலங்கக்
காட்சி ஆர்வம் கையிகந்து
ஈர்த்தலின்
நறுமணம் கமழும் நந்திநதி
குடையாது

எழுமுனி வரர்தம் எழுசுனை
யாடாது
அலைமலைப் பகைஞன்
அருள்கயம் படியாது
நாக வண்சுனை நன்புனல்
தோயாது
விண்டு தீர்த்தம் மேவரக்
குளியாது
அலரவன் இருஞ்சுனை
அழிபுனல் முழுகாது
எத்துயர்த் திரளும் அத்தினத்து
அகற்றுஞ்
சரவணப் பொய்கைத்
தடம்புனல் துளைந்து
மென்மெலக் குன்றம் மீமிசை
இவர்ந்து
காலைநண்பகல் மாலைமுப்
போதும்

வைகல் வைகல் மலர்மூன்று
தெரிக்கும்
நீலப் பைஞ்சுனை நேர்கண்டு
தொழுது
புரண்டனர் சூழும் பொற்பினர்
மிடைதலின்
அடியிடப் படாஅ ஆரிடை வீதி
ஒதுங்குபு பைப்பய ஒருமுறை
சூழ்ந்து
தூவும்எள் நிலத்துத்
தோயாதுவெறுத்த
தேவர்கள் குழுவும் தேயத்
தொழுதியும்
தடைஇய வாயல் தடையாது
நுழைந்தாங்கு
ஒருவர்மெய் மணிப்பூண்
ஒருவர்மெய் வடுச்செய
நெருங்கிச் சென்று நித்தில

வாள்நகை
வள்ளி நாயகி மணத்தினை
முடித்த
கள்ள வேழக் கடவுளைப்
பணியா
வீரர்ஒன் பதின்மர் வார்கழல்
தாழ்ந்துமற்று
ஆவயின் வதியும் அமரரைத்
தொழுது
பூதப் பகுப்பும் பூதகா ரணமும்
இந்தியக் கூட்டம் இரண்டுமுக்
குணமும்
நந்தும்ஆங் காரமும் நலத்தகு
கரணமும்
இறுவாய் மாயை எழுவாய்
ஏழும்
சுற்றம் என்னத் தோன்றிய
ஐந்தும்

விராய்நின்று இயக்கி
மராதுநின்று ஒளிரும்
ஆரா வின்பம் அருள்நிலை
அம்ம
தீரா மலப்பிணி தீர்த்தருள்
கொழிப்ப
அருள்திரு உருவுகொண்டு
அவிர்மணித் தவிசின்
ஞான சத்தியும் கிரியா சத்தியும்
வானவர் கோமான் வளம்பயின்
மகளும்
கானவர் நலங்கூர் கன்னியும்
என்ன
இரண்டு பாலும் இருந்தனர்
களிப்பக்
கண்டமெய் யடியர் கலவினர்
போற்றக்
காணா விண்ணவர் கலவாது

ஏத்தக்
கண்கடை ஒழுகும் கருணை
நோக்கமோடு
இனிதுவீற்று இருக்கும்
எழில்நேர் காண்டலும்
எஞ்சுநோய் துவர இரியல் போக
விஞ்சுநாற் பொருளும் மேவந்து
துவன்ற
ஆற்றாக் கடுந்துயர் அருநரகு
உழப்பவர்
நோற்றமுன் ஊழ்நனி நூக்கலும்
நொடிப்பின்
ஆயிடை நின்று மாயிரும்
துறக்கம்
புக்குழிப் பொலிவித்து
ஒக்கதோற் றத்து
விம்மித மகிழ்ச்சி மெய்தவ
வீக்க

ஒருகதி விட்டுமற்று ஒருகதி
அடைந்தவர்
மயங்கறிவு என்ன உயங்குமுன்
உயங்கல்
எய்யே னாகி இறுமாப்பு எய்தி
செய்முறை தெரியாது திருமுன்
நிற்ப
இருமைப் பயனும் எளிதினுற்று
அளிக்கும்
பூதியும் திருவுருப் பூச்சுநன்கு
அளித்திட்டு
என்னைத் தன்வசம் ஆக்கிய
உலகை
என்வச மாக்கி என்றுமோர்
இயல்பின்

நின்றதன் நிலையின் நீங்காது
இருத்தி
விடாதுவிட்டு அருள

மெய்யருள் மேற்கொண்டு
ஒழியாது ஒழிந்து வழிவரு
கின்றனன்
அத்தகு பெருமான்
அருள்விளை யாடலைச்
சற்றிது கேண்மதி தவமேம் படுந
விச்சொன்று இன்றி
விளைவுமிக்கு ஆக்கியும்
விச்சுமிக்கு கிருப்ப
விளைவுமுழுது ஒழித்தும்
ஒளிதலை வளர்ப்ப ஒளிகளைத்
தணித்தும்
அழுக்கினைக் கழுவ
அழுக்கினை ஏற்றியும்
உறுந்தொழி லாளர்க்கு
உறாதுசேண் அகன்றும்
வறுந்தொழி லாளர்க்கு
உவந்துடன் கலந்தும்

விதித்தநல் விதிகளை
விலக்கென உவர்த்தும்
விலக்கினை விதியென மேதக
நயந்தும்
இத்தகு தொழின்மை நித்தலும்
இயற்றிப்
பொற்றபே ரின்பருள்
பெற்றியன் அதான்று
இருமுது குரவர் எழுவாய்ச்
சுற்றமொடு
துயரிலங்கு உலகம் தோற்றுதற்
பொருட்டுத்
தந்தை என்ன ஐந்துமுகன்
ஆகியும்
அன்னை என்ன மனோன்மனி
ஆகியும்
முன்முறை தந்தையர் தாயர்
என்ன

நாதம் சிவமே நலத்தகு விந்து
மேதகு சத்தி வேறுவே றாகியும்
பின்முறை தந்தையர் தாய
ரென்ன
மகேசன் உருத்திரன்
மகேசையுமை யாகியும்
தமைய னென்னத் தந்திமுக
னாகியும் 295
தனைய னென்னத் தாமரை
மருட்டு
மூவிரு முகமும் முன்னான்கு
கரமும்
மருவிவீற் றிருக்கும் ஒருதா
னாகியும்
கடப்படும் இரண்டு கைகோள்
இயங்க
நான வார்குழல் நகையிழை
யானையைக்

கானவ ரரும்பெறற் காமரு
மாதினைக்
கற்பினிற் களவினிற் பொற்புற
மணந்தும்
பொருள்துறை முழுதும்
புரையின்றி நடப்ப
அண்டகோ டிகளும்
அரைக்கணத் தளவையின்
வறிதுநகை தோற்றி இறுவது
புரியும்
எறுழ்வலி ஆற்றல் எய்யான்
போல
மந்திரந் தூது செலவிகல் மற்று
மாற்றிவெஞ் சூர்வலி காற்றிஉல
கோம்பியும்
எல்லாம் அறிந்தறி விக்கும்அவ்
வியல்பைக்

கண்கூ டாகக் காட்டுவன்
அதாஅன்று
மூவகை உருவாய் மூவுலகு
உயிர்த்து
மூவகை யுருவும் முயங்காப்
பரம்பொருள்
பந்தம் வீடு பல்லுயிர்க்கு
அமைத்தும்
பந்தம் வீடு படாத பெருந்தகை
ஆருயிர்க்கு உயிராய்
அமைந்தன நடாவியும்
ஆருயிர் காட்சிக்கு அணுகா
அருந்திறல்
தானாய் நின்று தற்காண்
தனிமுதல்
அளிகளின் அளியா
அளிகளுஉங் களியன்
ஒளிகளின் ஒளியா

ஒளிகளூஉங்கு ஒளியன்
வெளிகளின் வெளியா
வெளிகளூஉங்கு வெளியன்
அளவினின் அளவா
அளவினூஉங்கு அளவன்
இன்னான் ஒருவனை முன்னுபு
சென்றவன்
பூங்கழற் சேவடி போற்றுதி
யாயின்
பேரஞர் உறுத்த பேதுறு நோயுங்
காரண நோயும் கையிகந்து
இரியக்
கடைக்கணித்து அருளிக்
கரையினாற் பொருளுங்
கொடைக்கடன் நீயிர் குறித்த
அளவையின்
எண்மடங்கு ஆற்றி என்றும் தீரா
அகம்படித் தொழின்மையின்

அழுத்துவன் அன்றே
ஆடகப் பசும்பொற் பாடகச்
சீறடி
நாடக மகளிர் நவிற்றிய ஆடற்
சிலம்பு கிண்கிணி தீங்குழன்
முழவம்
முரசந் தூரி முழங்கொலி
யானும்
விண்டல முரினும் வியன்மணிப்
புரிசைக்
கொண்டல்கண் படுக்குங்
கோபுர நிரைகள்
ஆடுகொடி சுமந்த மாடநெடு
மாளிகை
இன்னன பிறவும் மன்னுத
லானும்
ஒலிதிரைக் கடலும் ஓங்குபல்
வரையும்

உடங்குதொக்கு அண்மி
ஒண்துறை ஆடி
இருபகுப் பினவாய் இருகரை
மருங்கும்
நோற்றன வதியும் பேற்றினைத்
தெரிக்கும்
மும்மையும் அளிக்கும் மூவா
முழுமுதல்
ஐம்முகன் ஆகி அமர்ந்தகீழ்க்
கோட்டமும்
பொன்னும் மணியும் புதுமலர்க்
குவையும்
திரைக்கயிற்று தூஉய்த்
திளைத்தெழுந் தொழுகு
நந்தி யாற்று நறும்புனன்
மடுக்கும்
குரங்குகதிர்ச் சாலியுங்
கொழுந்தீங் கரும்பும்

குலைப்பூங் கதலியும்
கோள்தெங்கு இனமும்
கோள்கள் மீப்பரிக்கும் பாளைக்
கமுகும்
வயின்வயிற் பொதுளி வளம்பல
வுறந்த
முருகலர்ப் பண்ணை ஒருபுறஞ்
சூழ
அவரை துவரை அரிக்கதிர்
வரகு
சாமை இறுங்கு ததைந்தன
விளையும்
கொல்லை முல்லை கோழிணர்ப்
பூவையும்
பந்தர் மாதவி யுந்திய கோங்கும்
பைங்காற் கொன்றை பசும்பொற்
சுண்ணமும்
வளிஉளர்ந்து எடுப்ப மறுபுல

வரைப்பும்
போர்த்தன கமழ்ந்து
பொறிவண்டு அழைக்கும்
அரும்புலப் புறவம் ஒருபுறஞ்
சூழச்
செருந்திமந் தாரங் குருந்துவழை
பாடலம்
கோங்கு சண்பகம்
வேங்கைமகிழ் சந்தனம்
குங்குமம் மரவம் கோழ்அழகில்
கப்புரம்
இல்லம் ஆவிரை வில்லம்
பாங்கர்
பிடர்ஞெமை நமையாண்டு
அடர்வரை எகின்சே
அசோகம் தேக்கே ஆத்தி சூதம்
மருது போதி வஞ்சி காஞ்சி
ஞாழல் புன்னை நரந்தை

மாதுளை
பொகுட்டரை இருப்பை
பூஞ்சினைச் சரளம்
முன்னம் பலாசு முருக்கை
வருக்கை
சோதி மாமரம் தொத்தின நாகம்
அன்றி அனைத்தும் துன்றிய
கறிக்கொடி
மல்லிகை முசுண்டை மற்றும்
பரித்து
மணங்கமழ் காமர் வல்லி
ஒன்றே
இணங்குபூத் தரும்தன்
நிகழ்ச்சியை நாடி
வசைப்படத் தத்தம் இசைவிளக்
குவபோல்
பொறிவரிச் சுரும்பும் வெறிநுகர்
தேனும்

தோகைமா மயிலும் தொடிக்கண்
பூவையும்
கிள்ளையும் குயிலும்
தெள்ளுகுரற் காட்டி
வண்தளிர்ப் பொதும்பர்
மருங்குகால் வளைஇ
நுண்தளி நறுந்தேன் நோலாது
திவளும்
ததைமலர்ச் சினைய தருவந்து
உடுத்த
பொன்னகர் வறுமையை
முன்னிநக் காங்கு
வேரல் நரன்றுஉக்க
வெண்மணிக் குப்பையும்
பிறழ்பல் பேழ்வாய்ப் பின்முன்
பார்வைச்

சிங்கவல் ஏறு பொங்குசினம்

திருகி
எழுந்துதாய்த் துமிப்ப
இருங்கடா யானை
மத்தகம் பிளந்து மாஇருங்
குன்றத்து
வெண்புனல் அருவி வீழ்வன
போலச்
சலசல வுக்க தரளக் குவாலும்
நிலவுராய்த் தவழ நெமிர்ந்தன
மிளிரும்
கவான்மலைப் புனத்துக்
கதிர்த்தினை காக்கும்
உவாமதி முகத்தார் ஓச்சினர்
விடுக்கும்
கவணையின் மணியோ கங்குற்
கானவர்
விலங்கினம் துரக்கும்
இலங்குகூர்ங் கணையோ

அலைத்தர விசும்பின்
நிலைத்தரு கலன்கள்
பல்வகை மின்கொடி ஒல்கிவீழ்ந்
தென்ன
வெல்வரை நிரையும் பில்குகதிர்
மணிப்பூங்
காழுந் தாமமுங் கவினத்
ததைஇய
மண்டப மேடை மாடமேல்
நிலைகள்
இயங்கா நிலைத்தேர்
இயங்குமணிப் பல்தேர்
விமானவூர் திகளும் வேற்றுமை
தோற்றா
வளம்பல தழீஇஎம்
மருங்கும்மெய் யடியார்
இடுமகில் தூமமும் எக்கரிற்
குவைஇய

படரொளி ஊட்ட பளிதக்
குப்பை
கான்றதீம் புகையும் கழுமிவிண்
கெழுமி
இமையார் நாட்டம் இமைப்பன
செய்ய
மல்லல் ஆவணம் மறுகும்
வீதியும்
நாள்தொறும் எழிலான் நவநவம்
ஆகியும்
இமைக்குநர் நாட்டம்
இமையாமை செய்ய
மண்டலம் விண்டலம்
மாற்றியது என்ன
இறும்பூது பயவா ஏர்குலாய்க்
கிடந்த
திசைகாப் பாளர் இசைநிறை
தேவர்

அலரவன் நெடுமால் ஆதிய
கடவுளர்
முதுக்குறை அன்பின்
முறைமுறை பழிச்சச்
சாறுநாள் அல்லது வேறுநாள்
அறியாது
உலகமுழு தோம்புபல் சிறப்பின்
நிலைபெறு தணிகை மலைகிழ
வோனே.

-----------

திருத்தணிகையாற்றுப்படை முற்றும்

---

This file was last updated on 15 Feb. 2010
Feel free to send corrections to the Webmaster